# சமூக வாழ்வலகுச் சுட்டிகள் பற்றிய கருதுகோளும் தமிழின விடிவிற்கான புதிய அணுகுமுறைகளும்.

மருத்துவர் - சிவநாதன் யமுனாநந்தா

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் உலகமயமாதல் வேகமாக மாறிவருகிறது. இதனால் நாடுகளுக்கு இடையே முரண்பாடுகளும் இனங்களுக்கு இடையே முரண்பாடுகளும் விசவட்டமாக அதிகரித்து செல்கின்றது. இவை மனிதகுலத்திற்கு உரித்தான அமைதிக்கு குந்தகமாக பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இனப்படுகொலைகள், இயற்கை வளங்களை சூறையாடுதல், சூழல் மாசடைதல் என்பன அவற்றுள் சில. இவற்றினை எதிர்கொள்ள சமூக வாழ்வலகு சுட்டிக் கருதுகோள்களை சமூகவியலாளர் கையாள வேண்டிய அவசியம் உள்ளது.

சமூக வாழ்வலகுச் சுட்டிக் கருதுகோளினை உலக நாடுகளுக்கு இடையேயும் இனங்களுக்கு இடையேயும் நாடு கடந்த இனங்களுக்கு இடையேயும் பிரயோகிக்கலாம்.

முதனிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் பன்னிரு சமூக வாழ்வியல் காரணிகளை வகைப்படுத்தலாம். அவையாவன,

1. உணவு
2. உறைவிடம்
3. நீர்
4. மின்சாரம்
5. போக்குவரத்து
6. கல்வி
7. தொடர்பாடல்
8. மருத்துவம்
9. நீதி
10. மதவழிபாடு
11. பொழுதுபோக்கு
12. தொழில்

அண்மைய காலங்களில் சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் பாதகமான மாற்றங்களை வட பகுதியில் மருத்துவத்திலும் நீதியிலும் ஏற்பட்டமையினை நாம் கண்ணுற்றோம். தொழில் புரிதலில் சமூக வாழ்வலகுச் சுட்டியின் பாதகமான நிலையினால் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயரும் நிலையில் உள்ளனர். தொடர்பாடல் தொடர்பான பாதகமான சமூக வாழ்வலகுக் கணியங்கள் மிகவும் வேகமாக சமூக இயக்கத்தினை பாதிக்கின்றன.

இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் மூன்று கணியங்கள் காணப்படுகின்றன. அவையாவன,

1. உற்பத்தி
2. வர்த்தகம்
3. நுகர்வு

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் சமூக வாழ்வலகு மேனிலையில் இருப்பதற்கு இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுக் கணியங்கள் சிறப்பு நிலையில் இருத்தல் அவசியம் இதில் முதலாவதாக உற்பத்தி அமைகிறது. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், தொழில்நுட்ப உள்ளீடு, மனிதவள உள்ளீடு என்பன சிறப்பாக அமைய வேண்டும். அடுத்து உற்பத்திக்கான வர்த்தகம் பாதகமற்றதாக அமைய வேண்டும். இறுதியாக மக்களின் நுகர்வு அவர்களின் உற்பத்தி திறனுக்கும் வர்த்தகத்திற்கும் இடையில் சமச்சீராக அமைத்தல் வேண்டும். இவை பாதிக்கப்படின் சமூக வாழ்வலகுச் சுட்டி இரு திசைகளிலும் கீழ்நிலையடையும்.

மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியாக நிர்வாகம் அமைகிறது. சமூக வாழ்வலகுச் சுட்டிகலின் முதல் இரு நிலைகளிலும் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியில் பாதிப்பினை ஏற்படுத்தும். இதனால் நிர்வாகம் சர்வாதிகாரமானதாகவும் வெளிப்படை தன்மை இல்லாததாகவும் அமையும்.

அதாவது முதனிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் உருவாகும் முரண்பாடுகள் இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் செல்வாக்கு செலுத்தும். இவ்வாறே மூன்றாம் நிலை

வாழ்வலகுச் சுட்டியில் செல்வாக்கு செலுத்தி நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளிலும் செல்வாக்கினை செலுத்தும்.

நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் கணியங்கள் அமைகின்றன அவையாவன

1. அரசியல்
2. இராணுவம்
3. இராஜதந்திரம்

இலட்சிய நாடுகளில் சமூக வாழ்வலகுச் சுட்டிகள் 100% இல் காணப்படும் உலக வல்லரசுகளிடையே இவை 75% ஆகக் காணப்படும். இன முரண்பாடுகள் உள்ள நாடுகள் யுத்தமுனைப்பை உடைய நாடுகளில் சமூக வாழ்வலகுச் சுட்டிகள் அனைத்து நிலைகளிலும் தாழ்நிலையிலேயே காணப்படும்.

நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியிலும் அஃதே இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியிலும் முதலாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளிலும் செல்வாக்கு செலுத்தும்.

ஈழத் தமிழர்களை பொறுத்தவரை நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகள் பூஜ்ஜிய மட்டத்திற்கும் 10% இற்கும் இடையிலேயே காணப்படுகின்றன. ஈழத் தமிழினத்திற்குறிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மேன்மையுறும் பட்சத்திலேயே தமிழினவிடியல் வெளிச்சமாகும். இவ்வாறே உலகில் உள்ள அனைத்துச் சிறுபான்மைச் சமூகத்தின் மேன்பாடும் அமையும். அதாவது ஒவ்வொரு இனமும் தனது சமூக இருப்பினைத் தக்கவைக்கவும் உலகமயமாதலினுள் சிதறுண்டு போகாதிருப்பத்திற்கு அவ்வவ்வற்றிக்குரிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் உன்னத நிலையில் வைத்திருத்தல் மிகவும் அவசியமானதாகும்.